## இலங்கை ஓவியர்கள்

### எம் சார்லிஸ்

கீறிட்ட இடம் நிரப்புக

1) எம் சார்லிஸ் இலங்கையின் சித்திரக்கலையில் **<u>மறுமலர்ச்சியை</u>** ஏற்படுத்திய யுக புருஷனாக கருதப்படுகிறார்.
2) எம்சார்லிஸ் அவர்களின் முதல் ஓவியம் கொழும்பு **<u>மாலிகாகந்த</u>** விகாரையில் அமைந்துள்ளது
3) பௌத்த சமயம் நலிவடைந்த காலப்பகுதியில் பௌத்த ஓவியங்களை வரைந்து ஜேர்மனிக்கு அனுப்பி அவற்றை **<u>லிதோ அச்சு</u>** முறையில் அச்சிட்டு பௌத்த மக்களுக்கு விநியோகித்தார்
4) எம்சார்லிஸின் ஓவிய வகைகளாக லிதோ அச்சு முறை ஓவியம் **<u>விகாரை ஓவியங்கள்</u>** என வகைப்படுத்தப்பட்டுள்ளது
5) எம் சார்லிசின் ஓவியங்களில் **<u>மேற்கத்தேய</u>** கலைமரபின் தாக்கத்தை காண முடிகின்றது
6) எம் சார்லிஸ் நிர்மாணித்த பாரிய புத்தர்சிலை **<u>மாத்தறை வெஹெறகேன</u>** யில் அமைந்துள்ளது
7) எம் சார்லிஸ் ஆரம்ப காலத்தில் தனது சித்திரகலைத்துறையினை யார் யாருடன் இணைந்து ஆரம்பித்தால்?

   1. புகழ்பெற்ற ஓவியர் நிச்சட்ஷென்றிக்கஸ் 2. கடொல் கல்கே மகா சித்தர குருன்னான்சே
8) எம் சார்லிஸ் லிரோ அச்சு முறையில் கிட்டத்தட்ட எத்தனை ஓவியங்களை அச்சிட்டு வெளியிட்டார்

   36
9) லிதோ அச்சு முறையில் அச்சிட்டு வெளியிட்ட ஓவியங்கள் சிலவற்றை குறிப்பிடுக
   1. சித்தார்த்தரின் பிறப்பு
   2. தாமரைப்பூவில் நடந்து வருதல்
   3. சித்தாத்தரின் திருமணம்
   4. சித்தாத்தரும் பிரஜாபதி கோதமியும், தாயாரும்
   5. சீவலி பிக்கு

10)எம் சார்லிஸ் ஓவியங்கள் வரைந்த பௌத்த விகாரைகள் யாவை?
   1. கொழும்பு மாலிகா கந்த விகாரை
   2. கரகம்பிட்டிய சுபோதாராமய விகாரை
   3. மத்துக பாந்திய சிறி மங்கலா ராமய விகாரை
   4. பொத்துப்பிட்டிய பூஜாராமய விகாரை

11)எம். சார்லிஸ் கலைஞனின் ஓவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகளை / கலைப்பண்புகளை குறிப்பிடுக.
   1. சரியான ஒழுங்கிணைப்பு
   2. தூரதரிசனத்தன்மை
   3. ஒளி நிழல் காட்டல்
   4. நிறப்பிரயோகம்
   5. அலங்காரத்தன்மை
   6. ஐரோப்பிய / மேற்கத்தேய கலைமரபின் ஒத்த தன்மை

2) **கீழே தரப்பட்டுள்ள ஓவியங்களை இனங்கண்டு சிறு குறிப்பு எழுதுக.**



1) எம் சார்லிஸ்
2) மேலைத்தேய,கீழைத்தேய இயற்கை வாத பாணி
3) மடோனா ஓவியங்களின் தாக்கம்
4) சித்தார்த்த குமாரனும் தாயாரும் மாளிகையினுள் தனிமையாக இருக்கும் காட்சி
5) இது லிதோ அச்சுப்படம்
6) முன் பகுதி பின்பகுதி மாத்திரம் காட்டப்பட்டுள்ளது
7) தூரதரிசனம்,ஒளி நிழல் காட்டல் முப்பரிமானத்தன்மை காட்டப்பட்டுள்ளது.



1. எம்.சார்லிஸ்
2. மேலைத்தேய,கீழைத்தேய இயற்கை வாதப்பாணி
3. முன்பகுதி,இடைப்பகுதி,நடுப்பகுதி என சித்தரிக்கப்பட்டுள்ளது.
4. தூரக்காட்சி,நிலத்தோற்றம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
5. சித்தார்த்தர் பிறந்து தாமரைப்பூவில் நடந்து வரும் சந்தர்ப்பம்
6. முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு ஒளி நிழல் காட்டி வர்ணந்தீட்டப்பட்டுள்ளது.

**ஜோர்ஜ் கீற்**

1) ஜோர்ஜ்கீற் கி.பி 1901 ஆண்டு ஏப்ரல் மாதம் 17 திகதி கண்டியில் எம்பிட்டியாவில் பிறந்தார்.
2) இவர் கண்டி திரித்துவக்கு கல்லூரியில் ஆரம்பக்கல்வியைப் பயின்றார்.
3) இவர் கோதமி விகாரையில் முதலாவதாக ஓவியம் வரைந்தார்
4) இவரது ஓவியங்கள் பப்லோ பிக்காசோ ஓவியங்களின் ஒத்த தன்மையை கொண்டுள்ளது.
5) ஜோர்ஜ் கீற் கி.பி 1939-1940 காலப்பகுதிகளில் கொழும்பு பொரளை விகாரையில் பௌத்த மத ஓவியங்களை வரைந்தார்.
6) இங்கு இவர் ஓவியம் வரைய இவரை நிர்மானித்துக் கொடுத்தவர் அன்ட்ருபுரொயிட் எனும் கலைஞன் ஆவார்.
7) இவர் கோதமி விகாரையில் வரைந்த ஓவியங்கள் எவை?
   1. மகா மாயாதேவியின் வரவு
   2. சித்தாத்தரின் பிறப்பு
   3. யசோதரை திருமணம்
   4. நான்கு முன்னறி குறிகளைக்காணுதல்
   5. மாரயுத்தம்
8) இவ் ஓவியங்கள் என்ன அளவு சுவரில் வரையப்பட்டது?
   192 சதுர மீற்றர் அளவில் உயரமான சுவரில்
9) இவர் ஓவியம் வரைகின்ற பொழுது எதற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்?
   இரேகைகளிற்கு
10) ஜோர்ஜ் கீற் கோதமி விகாரையில் வரைந்த ஓவியங்களுக்கு பயன்படுத்திய நிறங்கள் எவை?
   சிவப்பு, வெள்ளை, மண்ணிறம்,மஞ்சள்,நீலம்,பச்சை

பின்வரும் ஓவியங்களை பற்றி சிறுகுறிப்பு எழுதுக?



1) இது மார யுத்தம் என்ற ஓவியமாகும்

- ❖ பிக்காசோவின் கலைவடிவ வாத தன்மை பின்பற்றப்பட்டுள்ளது
- ❖ கேத்திரகணித உருவங்களை பயன்படுத்தி யுத்தபடையினரின் பயங்கரமான சுபாவம் வெளிப்படுத்தப்படுகின்றது.
- ❖ படைகளை சித்தரிக்க சாம்பல்,கறுப்பு நிறங்களும் புத்த பெருமானை சித்தரிக்க மஞ்சள் மெல்லிய மண்ணிறம் பயன்பட்டுள்ளது.
- ❖ இரேகைகளின் தன்மையை போலவே முப்பரிமானத்தை காட்ட வர்ணத்தை பிரயோகித்த விதமும் அவருக்கே உரிய பாணியில் அமைந்துள்ளது.



- ❖ இது நாயிகா/தலைவி என்ற சித்திரமாகும்
- ❖ நாயிகா ஓவியங்கள் பலவற்றை ஜோர்ஜ்கீற் வரைந்துள்ளார்
- ❖ எண்ணெய் வர்ண ஊடகத்தாலான கன்வஸ் ஓவியப்படைப்பாகும்.
- ❖ நாயிகா சித்திரம் நீண்ட விழிகளையும் அகன்ற உதடுகளையும் கொண்டுள்ளது
- ❖ நெற்றியையும் மூவகையும் காண்பிக்க ஒரே நேர்கோடு பயன்பட்டுள்ளது
- ❖ இவ் ஓவியம் இந்து சமய மரபை ஒத்தது

**சோலியஸ் மெண்டிஸ்**

கீறிட்ட இடம் நிரப்புக

1) சோழியஸ் மெண்டிஸ் **<u>கி.ப 1897</u>** <u>யூன்</u> மாதம் 17ம் திகதி மாதம்பைக்கு அண்மையிலுள்ள **<u>மகாவெவ</u>** எனும் இடத்தில் பிறந்தார்
2) சோழியஸ் மெண்டிசின் முழுப்பெயர் வலிமுனி **சோழியஸ் மெண்டிஸ்**
3) சோழியஸ் மெண்டிசின் முதல் ஓவியம் **<u>மாவில சுமன குசுமாராமய</u>** விகாரையில் வரையப்பட்டுள்ளது.
4) இவரது முதல் ஓவியம் **<u>எதிர்காலத்தில் புத்தரா</u>** இருக்கும் புத்தரின் உருவம் ஆகும்
5) புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்கள் **<u>வரலாற்றுச் சம்பவங்கள்</u>** என இரு வகைப்படும்

**பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

6) புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்கள் பற்றிய ஓவியங்கள் யாவை?
   1. மகாமாயாதேவி கண்ட கனவு 2. வயல் உழுதல் 3.சித்தார்த்தர் கல்வி பயிலுதல்
   4. சுஜாதா பாற்சோறு தானம் வழங்குதல் 5. புத்தராகுதல் 6. சொத்திப்பிராமணர்புல்வழங்குதல்
   7. இறைபதம் அடைதல்
7) வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஓவியங்கள் யாவை?
   1. விஜயன் இலங்கைக்கு வருகை தருதல் 2. அநுராதபுர எல்லையைக் கட்டுதல்
   3. அனு விகாரையில் திரிபீடகம் நூலாக வெளியிடல்
   4. ஹேம மாலாவும் நந்த குமாரனும் புனித தந்தத்தை இலங்கைக்கு கொண்டு வருதல்
   5. சங்கமித்தை வெள்ளரசக் கிளையை இலங்கைக்கு கொண்டுவருதல்
   6. வெலிவிட்ட ஸ்ரீ சுனங்கர தேரருக்கு கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனால் சங்கப்பதவியை வழங்கல்

7. புத்தகோஷ கிமியன் விசுத்தி மார்க்கய என்ற நூலை எழுதுதல்
8. புத்தரின் இலங்கை விஜயத்தைக் காட்டும் நான்கு ஓவியங்கள்
9. புத்தரின் இலங்கை விஜயத்தைக் காட்டும் நான்கு ஓவியங்கள்
   1. மகியங்களை 2. நாகதீபம் 3. கல்யாணங் (களனி)
   4. பதலாஞ்சனங்(ஸ்ரீபாத/சிவனொளிபாதமலை

**பின்வரும் ஓவியங்களை இனங்கண்டு சிறு குறிப்பு எழுதுக?**



1. காலம் - கீர்த்தி ஸ்ரீமேகவர்ண அரசனின் காலத்தில் வரையப்பட்டது(கி.பி 301-328)
2. கருப் பொருள்:- புனித தந்தத்தை பாதுகாக்க ஹேமமாலாவும் நந்த குமாரனும் அதை இலங்கைக்கு கொண்டுவரும் காட்சியை சித்தரிக்கின்றது.
3. கலைஞன் - சோலியஸ் மென்டிஸ்
4. வர்ணப் பிரயோகம் - மனங்கவர் வர்ணங்களான இருளான மஞ்சள் மண்ணிறம்,கறுப்பு,வெள்ளை நிறங்கள் பிரயோகித்துள்ளார் இதனூடாக வர்ணபேதம், இயற்கையின் அபூர்வத்தன்மை பேணும் விதத்தில் தீட்டப்பட்டுள்ளது.
5. சிறப்பு – மென்மையான ரேகைகள் லயத்துடன் கூடிய மனித உருவங்களோடு ஒருங்கிணைத்து வரைந்து உடலழகு, ஆடை ஆபரண அழகையும் சிறப்பாக வரைந்துள்ளார்.
6. வரையப்பட்டுள்ள இடம் - புதிய களனி விகாரையில்



1. இனங்காண்க – சங்கமித்தை வெள்ளரசக்கிளையை இலங்கைக்கு கொண்டுவரும் காட்சி
2. காணப்படும் இடம் -புதிய களனி விகாரையில்
3. கலைஞன் - சோலியஸ் மென்டிஸ்
4. வரையப்பட்டுள்ள முறை – டெம்பரா முறையில் உலர்ந்த சாந்தில்

**எச்.ஏ.கருணாரத்ன**

கீறிட்ட இடம் நிரப்புக

1) இலங்கை ஓவியக்கலையில் **புதிய மரபை** உருவாக்குவதில் முன்னோடியாக செயற்பட்ட தலைசிறந்த கலைஞர் எச்.ஏ.கருணாரத்ன
2) எச்.ஏ.கருணாரத்ன அரச நுண்கலைக் கல்லூரியில் பயின்று பிற்காலத்தில் அதே கல்லூரியில் **விரிவுரையாளராக** பணியாற்றினார்
3) இவரது ஆக்கங்களில் அமெரிக்க ஓவியகலைப்பாணியான அரூப கலை (Abstract) செல்வாக்கு செலுத்துகின்றது
4) எச்.ஏ.கருணாரத்னவின் ஆக்கங்களில் மத்திய பகுதியை மையமாகக் கொண்ட சித்தரிப்பு முறை இன்றி தளம் முழுவதும் பரவிக் காணப்படும் ஒழுங்கமைப்பு காணப்படுகின்றது.
5) இவரது படைப்புக்களின் அர்த்தம் மறைபொருளாகி பார்ப்போரின் சிந்தனைக்கு இடமளிக்கின்றது
6) ஆரம்ப காலத்தில் இவரது ஓவியங்கள் எண்ணெய் வர்ணம் கன்வஸ்துணி கொண்டு நிர்மாணிக்கப்பட்டன ஊடகத்தை

7) பிற்காலத்தில் **<u>ஆணிகள், கட்போட்,நூல்,துணித்துண்டு</u>** போன்றவற்றை பயன்படுத்தி ஆக்கங்களை நிர்மாணித்துள்ளார்.
8) எச்.ஏ.கருணாரத்னவின் சந்திரோதயம் என்ற ஆக்கம் **<u>1980ம்</u>** ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது.
9) வெவ்வேறு பொருட்களை பயன்படுத்துவதன் ஊடாக **<u>எதிர்மாறான மேற்பரப்பு இயல்பினை (Terture)</u>** வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.
10)பெயரிடாத ஆக்கம் என்ற படைப்பு **<u>2008ம்</u>** ஆண்டில் ஆக்கப்பட்டதாகும்.



பின்வரும் படங்களை இனங்கண்டு தரப்பட்ட தலைப்புக்களை விளக்குக.

1. கலைஞர் - H.A.கருணாரத்ன
2. காலம் - 1980ம் ஆண்டளவில்
3. ஊடகம் - எண்ணெய்வர்ணம் கன்வஸ் துணி
4. வெளிப்படும் இயல்பு – அரூபபாணி / Abstract/வெளிப்பாட்டுவாத இயல்பு
5. ஒழுங்கமைப்பு - இந்த ஓவியத்தின் மத்தியில் ஒழுங்கமைப்பு காட்டப்படாமல் தளம் முழுவதும் வடிவங்களைப்பரப்பி வரைந்து ஒழுங்கமைத்துள்ளார்.
6. கருப் பொருள் - இயற்கையின் சந்திரோதயம் என்ற சந்தர்ப்பத்தை கருப்பொருளாக கொண்டுள்ளார்.
7. சிறப்பியல்பு – வானத்தில் உதித்த சந்திரன், அச்சந்திர ஒளி விழுந்த தளங்களின் அழகு என்பன வர்ணம், இரேகைகள், தளவடிவங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது.
8. விமர்சகர் கருத்து – சமய உணர்வுடன் கூடிய சாந்தமான இரசனையினை உருவாக்குவதாக கருத்து வெளியிட்டுள்ளார்.



1. கலைஞர் - எச்.ஏ.கருணாரத்ன
2. படைக்கப்பட்ட காலம் - 2008ல்
3. நுட்பமுறை – சிலையின் இயல்பைக் கொண்ட ஒருங்கு சேர்ப்பு நுட்பமுறையில் நிர்மானிக்கப்பட்டதாகும்.
4. பயன்படுத்தப்பட்ட பொருட்கள் - உலோகத்தகடுகள்,கம்பி,ஆணி போன்றவை
5. விசேட தன்மை – கரடான,சொரசொரப்பான மூலப்பொருள்களைப் பயன்படுத்தியமை
6. வெளிப்படும் பண்புகள் - விபரங்கள் குறைவான,யோக நிலையைக்காட்டும், அடிப்படைப் பண்புகளை கொண்டு எளிமையான, குறியீட்டு ரீதியான தன்மை வெளிக்காட்டப்படுகிறது.

**<u>ஸ்டான்லி அபயசிங்ஹ</u>**

கீறிட்ட இடம் நிரப்புக.

1) ஸ்டான்லி அபயசிங்ஹ **<u>இருபதாம்</u>** நூற்றாண்டின் நவீன கலை வரலாற்றின் ஆரம்ப காலத்தில் தோன்றிய சிறந்த ஒரு சித்திரக் கலைஞர் ஆவார்.
2) ஸ்டான்லி அபயசிங்ஹ **<u>இலங்கை தொழிநுட்ப</u>** கல்லூரியில் சித்திரக்கலை பயின்றார்
3) ஸ்டான்லி அபயசிங்ஹ இந்தியாவுக்கு சென்று **<u>கீழைத்தேய</u>** சித்திரக் கலையை பயின்றார்
4) 43 குழுவினரின் நவீனத்துவ வெளிப்பாட்டுக்கு சமாந்தரமாக **<u>அரசநுண்கலை</u>** கல்லூரியில் நவீன பாணியின் செல்வாக்கை கொண்டு புதிய போக்கை கட்டியெழுப்பிய முன்னோடிக் கலைஞராவார்.
5) படைப்புக்களின் பின்னணிக்காக கனவடிவவாத கலையின் பின்னணி வெளியினது பண்புகளின் செல்வாக்கு பெறப்பட்டுள்ளமையை காணமுடிகின்றது.

6) ஸ்டான்லி அபயசிங்ஹவினது சில கலைப்படைப்புக்களை தருக?
மட்பாண்டகூடம், ஆவணி ஊர்வலம், தியானம், பாலகன், இளைஞன், லக்ஷ்மியின் பிறப்பு
7) "ஸ்டான்ஸி அபயசிங்ஹ" எனும் ஓவியரின் மட்பாண்ட கூடம் என்னும் ஓவியத்தின் வேறு பெயர் தருக? கும்பல் விரல
8) ஸ்டான்லி அபயஹங்கவின் ஓவிய படைப்புகளில் காணப்படும் சிறப்பியல்பு யாது?
குறுகிய தடித்த கோடுகளின் பயன்பாடு
9) எத்தனை ஆண்டு காலம் வரை ஸ்டான்லி அபயசிங்ஹ, நுண்கலைக் கல்லூரியின் அதிபராக கடமையாற்றினார்? 1965 – 1969

**கீழே தரப்பட்ட ஓவியங்களை இனங்கண்டு சிறுகுறிப்பு எழுதுக**



1. ஸ்டான்லி அபயசிங்ஹ
2. முன்பகுதியும் பின்பகுதியும் ஒரே தளமாக காட்டப்பட்டுள்ளது
3. முப்பரிமாண தன்மை காட்டப்பட்டுள்ளது
4. கன்வல் துணியின் மீது எண்ணெய் வர்ணம் கையாளப்பட்டுள்ளது.
5. இந்த ஓவியம் ஒரு மட்பாண்டக் கடையையும் ஒரு தம்பதியினரையும் காட்டப்பட்டுள்ளன.
6. உணர்வு பாவ வெளிப்பாடு காட்டப்பட்டுள்ளது.



1. ஸ்ரான்லி அபயசிங்ஹ
2. ஆவணி ஊர்வலத்தை கருப்பொருளாக கொண்டு வரையப்பட்டுள்ளது.
3. முன்பகுதி பின்பகுதி எனக் கையாளாது ஒரே தளத்தில் உருவங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
4. இருட்சாயல் ஒளிப்பான நிறங்கள், எதிர்வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன

**முதலியார் ஏ.சீ.ஜீ.எஸ் அமரசேகர**

1) முதலியார் ஏ.சீ.ஜீ.என் அமரசேகர **<u>20ம்</u>** நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கலைஞராவார்.
2) இவர் இலங்கையில் **<u>அக்கடமிக் யதார்த்தவாதம்</u>** (Academic Realism) ஓவிய முறையில் முன்னோடியாகச் செயற்பட்டார்
3) 1883 மார்ச் 3 ஆந்திகதி காலி மாவட்டத்தின் **<u>தொடர்துவை</u>** என்ற ஊரில் பிறந்தார்.
4) முதலியார் அமரசேகர ஆரம்பத்தில் <u>காட்டூன்</u> கலைஞராக அறிமுகமானார்.
5) பிரித்தானிய ஆட்சியாளரின் அனுசரணையில் நிறுவப்பட்ட **<u>இலங்கை கலைச்சங்கத்தின்</u>** (Ceylon Society of Art) முன்னோடிக் கலைஞர்களுள் ஒருவராக விளங்கினார்
6) இலங்கை கலைச்சங்க கலைஞர்களின் படைப்புக்களில் **<u>பிரித்தானிய கலைஞர்களின்</u>** கலைச் செல்வாக்கை காண முடிகிறது.
7) மெய்யுருக்கள்,யதார்த்தமான **<u>நிலத்தோற்றங்கள்</u>** போன்றவற்றை வரைவதில் திறமை மிக்கவராக காணப்பட்டார்.
8) தமது சித்திரப்படைப்புக்களுக்காக **<u>நீர் வர்ணம்</u>** **<u>எண்ணெய்</u>** வர்ணம் ஆகிய இரண்டு நிற ஊடகங்களைப் பயன்படுத்தி உள்ளார்.
9) இவர் தனது படைப்பாக்கங்களில் **<u>உருவ ஒழுங்கமைப்புகளுக்கு</u>** முதலிடம் கொடுத்துள்ளார்.

10) ஐரோப்பிய அக்கடமிக் கலையின் முதன்மையான பண்பாகிய **<u>தூரநோக்கு</u>** முறையினை தமது ஓவியங்களின் அடிப்படையாக கொண்டுள்ளார்.

11) ஒளி நிழலுடன் தொடர்புபட்ட **<u>கியாரஸ் கியூரோ</u>** கோட்பாட்டை இவரது படைப்புகளில் காணலாம்

12) கலைஞர் முதலியார் A.C.G.S அமர சேகரவினது படைப்புகள் சில வருமாறு

1. தொழிலின்மை/தச்சனின் வீடு
2. பேயோட்டியின் மகள்
3. பூனைக்குட்டி
4. ரீட்மாவத்தை
5. அரச தலைவர்களின் மெய்யுருக்கள்/பிரதிமை ஓவியங்கள்

**பின்வரும் ஓவியங்களை இனங்கண்டு சிறு குறிப்பு எழுதுக**

1.



1. இனங்காண்க – பேயோட்டியின் மகள் என்ற ஓவியம்
2. கலைஞர் - முதலியார் ஏ.சீ.ஜீ.எஸ் அமரசேகர
3. உணர்வு வெளிப்பாடு – கணப்பொழுதில் அச்சமடைந்துள்ள விதம், அக உணர்வை வெளிப்படுத்தல்
4. ஒழுங்கமைப்பு – சாந்திக்கிரியைகளுக்குரிய உடைகள் அணியப்பட்டு பய உணர்வை வெளிப்படுத்துமாறும், தீச்சுவாலையானது அவனது முகத்தில் வெளிப்படும் உணர்வுடன் தொடர்புறுமாறும், வேடமுகம்,பாரிய நிழல், நாடகப்பாங்கான தன்மை வெளிப்படுமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
5. ஓவியத்தின் தன்மையானது இரண்டு தளங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது
6. வர்ணப்பயன்பாட்டு ஒரேவர்ணத்தின் சாயல்கள், இருண்ட நிறப் பயன்பாட்டினுள் ஒளி கையாளப்பட்டு ‘‘கியுரஸ் கியூரே’’ முறையில் தீட்டப்பட்டுள்ளது.
7. தற்போது வைக்கப்பட்டுள்ள இடம் - கொழும்பு தேசிய கலாபவனத்தில்

2.



1. தச்சனின் வீடு / தொழிலின்மை என்ற ஓவியமாகும்
2. முதலியார் அமரசேகரவினால் வரையப்பட்டது
3. கன்வஸ் துணியில் எண்ணெய் வர்ணம் பாவிக்கப்பட்டுள்ளது.
4. தற்போது கொழும்பு தேசிய கலாபவனத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
5. வறுமை நிலையை காட்டுவதற்கு மனித உருவங்களும் வர்ணங்களையும் கலைஞன் பயன்படுத்தியுள்ளார்.
6. முன்பகுதி,நடுப்பகுதி, பின்பகுதி என தூரநோக்கு பண்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
7. அக்கடமி இயற்கைவாத, யதார்த்தவாத பாணியை பின்பற்றி வரைந்துள்ளார்.
8. யன்னல் ஊடாக விழும் ஒளி முகங்களில் விழுந்து உணர்வை வெளிக்காட்டுகின்றது.

**G. S. பெர்னாந்து**

கீறிட்ட இடம் நிரப்புக.

1. ஜீ.எஸ். பெர்னாந்து **<u>ரிச்சர்ட் ஹென்றிக்கஸ்</u>** என்பவருடன் ஓவியக் கலையை கற்றார்.
2. இலங்கையின் முதலாவது சித்திரக் கலையை படைத்தவர் **<u>G.S.பெர்னாந்து</u>** ஆவார்
3. G.S பெர்னாந்துவின் சித்திர ஆக்கங்களில் **நீர் வர்ண** ஊடக சித்திரங்கள் சிறப்பானவை
4. G.S பெர்னாந்துவின் ஓவியங்களில் ஆழமும் **<u>தூர நோக்கு</u>** இயல்புகளும் வெளிக்காட்டப்பட்டுள்ளது
5. G.S பெர்னாந்து தனக்கே உரிய **<u>இயற்கைவாத</u>** சித்திர கலைப்பாணியில் ஓவியங்களை வரைந்துள்ளார்
6. G.S பெர்னாந்து படைத்த ஆக்கங்கள் எவை?

   1) ஓட்டு சூளை 2) கடலா தெனியா – விஜயோத்பாய
7. G.S பெர்னாந்துவின் ஓவியங்களின் விசேட பண்புகள் எவை?

   இலங்கைச் சூழலின் இயற்கை அமைப்பு
8. G.S பெர்ணாந்துவின் ஓவியங்களிலுள்ள விசேட இயல்புகள் எவை?

   சித்திரத்தில் ஆழமும்,தூரநோக்கு இயல்புகளும் வெளிக்காட்டப்படல் மனித மெய்நிலைகள் லலித்தையும், உணர்வுவெளிப்பாட்டையும் கொண்டிருத்தல்

   முப்பரிமான இயல்புகளுடன் பிரகாசமான நிறங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல்
9. வணிக விளம்பர ஓவிய கலைஞர் என்ற வகையில் எவற்றை படைத்துள்ளார்

   வணிக விளம்பர சுவரொட்டி

   பெயர்ச் சுவரொட்டி,புத்தக அட்டைகள்
10. இவரது இரண்டு ஓவியங்களிலும் காணப்படும் பொதுவான இயல்புகள் ஒன்றை குறிப்பிடுக?

    முன்னணி, இடையணி,பின்னணி என மூன்று பகுதிகள் காட்டப்பட்டுள்ளன.
11. G.S பெர்னாந்து கல்வி பயின்ற கலைஞர்கள் யாவர்?

    ரிச்சட் ஹென்றிகஸ்

    M.சார்லிஸ்

    முதலியார் அமர சேகர

**கீழே தரப்பட்டுள்ள ஓவியங்களை இனங்கண்டு சிறுகுறிப்பு எழுதுக.**



- ❖ இது ஜி.எஸ் பெர்ணாந்துவின் ஒட்டுச்சூளை என்ற ஓவியம்
- ❖ தேசிய கலாபவனத்தில் நிரந்தரமாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது
- ❖ ஐரோப்பிய இயற்கை வாத பாணி சார்ந்த ஒரு படைப்பாகும்
- ❖ நீர் வர்ணத்தினால் தீட்டப்பட்ட ஒரு கலைப்படைப்பாகும்
- ❖ இப்படைப்பில் இயற்கைவாத பாணி பண்புகளும், ஐரோப்பிய நிலத்தோற்ற ஓவியங்களும் செல்வாக்கு செலுத்தியுள்ளன
- ❖ சித்திரத்தில் ஆழமும், தூரநோக்கும் இயல்புகளும் சித்தரிக்கப்பட்டுள்ள
- ❖ இது ஜி.எஸ் பெர்னாந்துவின் கடலாதெனிய விஜயோத்பாய ஓவியமாகும்.



❖ தேசிய கலாபவனத்தில் காட்சிகளாகவைக்கப்பட்டுள்ளது.
❖ ஐரோப்பிய இயற்கை வாத நுட்பமுறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது
❖ இயற்கை வாக பாணியின் பண்புகளும் ஐரோப்பிய நிலத்தோற்ற ஓவியங்களும் செல்வாக்கு செலுத்தியுள்ளன
❖ ஐரோப்பிய காலநிலைய கோட்பாட்டிற்கேற்ப வரையப்பட்டுள்ளது.
❖ பிரகாசமான வர்ணபிரயோகம்,முப்பரிமாணம் தூரநோக்கு இயல்பு கொண்ட வர்ணப்பிரதேச ($patoh$) நீர்வர்ண முறை கையாளப்பட்டுள்ளது.

**திஸ்ஸ ரணசிங்க**

1) இலங்கை சிற்பக் கலையில் புதியதொரு மரபை தோற்று விப்பதில் முன்னின்ற ஒரு சிறந்த கலைஞராக திஸ்ஸ ரனசிங்ஹ இனங்காணப்பட்டார்.
2) திஸ்ஸ ரணசிங்ஹ நீர் கொழும்பு நகரை அண்டிய மோகியானா எனும் கிராமத்தில் பிறந்தார்
3) மருதானை தொழினுட்பக் கல்லூரியில் J.D.A பெரேரா வின் கீழ் சித்திரக்கலையை பயின்றார்
4) வெண்கல ஊடகத்தையும் வார்ப்பு முறைகளையும் திஸ்ஸரணசிங்கம் அறிமுகம் செய்தார்
5) திஸ்ஸ ரணசிங்கவிற்கு பிரேசில் நாட்டில் நடைபெற்ற சாவோபோலோ கண்காட்சிக்காக முன்வைத்த குற்றப்பரிகாரம் எனும் சிற்பத்திற்கு தேசிய விருது கிடைத்தது
6) இலங்கை சிற்பக் கலையின் பாரம் பரிய ஊடகங்களை மாற்றியவர் யார்?
   திஸ்ஸ ரணசிங்ஹ
7) திஸ்ஸ ரணசிங்ஹா கலையை பயின்ற கல்லூரிகள் எவை?
   1. மருதானை தொழில்நுட்பக் கல்லூரி
   2. இங்கிலாந்து செல்சியா கலைக்கல்லூரி
   3. றோயல் கலைக்கல்லூரி கொழும்பு
8) “கடினசெயல்” என்னும் சிற்பம் எவ்வாறு அழைக்கப்படும்?
   துஷ்தரக் கிரியாவ
9) “கொழும்பு றோயல் கல்லூரி” என்னும் ஓவியத்தில் பயன்படுத்தப்பட்டுள் படைப்பு வகை யாது?
   குறைப்புடைப்பு/ரெறாகொட்டா
10) திஸ்ஸ ரணசிங்ஹ இலங்கை சிற்பக் கலையில் புதிய மரபை தோற்றுவித்த காலப்பகுதி யாது?
   20ம் நூற்றாண்டு

**கீழே தரப்பட்டுள்ள சிற்பங்களை இனங்கண்டு சிறு குறிப்பு எழுதுக**



1. துஸ்தரக்கிரியாவ / கடினச் செயல் என்ற சிற்பமாகும்
2. திஸ்ஸ ரணசிங்க என்ற சிற்பக்கலைஞரால் ஆக்கப்பட்டது
3. சித்தார்த்த போதிசத்துவரின் கடினச் செயலைக் காட்டுவதற்காக கரைந்த தேய்ந்த சதைப்பகுதி எலும்புத்தொகுதி நன்கு உருவாக்கப்பட்டுள்ளது.
4. புறகட்டமைப்பை விட உள்ளுணர்வுகளை காட்டத்தக்கவாறு யதார்த்த பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
5. இயற்கை வாத கலைப்பிரயோகம் பயன்படுத்தப்படவில்லை
6. இக்கலைப்படைப்பில் கருத்துநிலை/அருப கலைப்பண்புகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது

7. விமர்சகர்களின் கருத்து – குறைகருத்து நிலையான ($Semiapstract$) மற்றும் குறைவெளிபாட்டு வடிவங்களின் சேர்மானத்தினால் ஆனவை என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.
8. ஊடகம் - வெண்கலம்



1. இது கொழும்பு றோயல்கல்லூரி "நவரங்ஹல" மண்டபத்தில் உள்ள படைப்பாகும்
2. இது புடைப்புச் சிற்பக்கலையில் புதுப்பரிமாணத்தை ஏற்படுத்திய ஒரு படைப்பாகும்.
3. நுட்பமுறை – சுடுமண் நுட்பமுறை
4. கருப் பொருள் - இலங்கை நாடகக் கலையின் வரலாறு இதன் நான்கு கட்டங்கள் காட்டப்பட்டுள்ளன.
5. விமர்சகர் கருத்து – கனவடிவ வாத பண்புகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன.
6. கனவடிவவாத அலகு வடிவங்களோடு, பாணிசார்ந்த தள வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.